பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 09 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

**2)** தமிழகத்தில் பேரிடர் முன்னெச்சரிக்கை பணிகளுக்காக **281** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு செங்கோட்டையன் கூறியுள்ளார்.

**3)** நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போன தமிழர்களை தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தமிழக அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

**4)** தெற்கு ரயில்வேயில் அகல ரயில்பாதை **100** சதவீதம் மின்மயமாக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அறிவித்துள்ளது.

**5)** துலீப் கிரிக்கெட் கோப்பையை கிழக்கு மண்டல அணி வென்றுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அடுத்த மாதம் 27-ஆம் தேதி தொடங்க உள்ள அறிவியல் தொழில்நுட்ப மாநாடு, உலகளாவிய விஞ்ஞானிகள், தொழில் முனைவோர், கொள்கை வகுப்பாளர்களை இணைக்கப் போவதாக தெரிவித்தார்.

அறிவியல் என்பது பொதுமக்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட வேண்டும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் பேரிடர் முன்னெச்சரிக்கை பணிகளுக்காக 281 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு செங்கோட்டையன் கூறியுள்ளார்.

நாகை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், அம்மாவட்டத்தில் மட்டும் பத்து கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நாகை மாவட்டத்தில் **68** இடங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அங்கு வசிக்கும் மக்களை பாதுகாக்க ஆறு பல்நோக்கு பேரிடர் மையங்கள், **12** புயல் பாதுகாப்பு மையங்கள், **100** சமுதாய நலக்கூடங்கள், **145** பள்ளிகள், **22** கல்லுரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக திரு செங்கோட்டையன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போன தமிழர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக தமிழக அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான, பொதுநல வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு தர்மாதிகாரி, நீதிபதி திரு அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, காணாமல் போனவர்களை மீட்க எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய மத்திய — மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டிருந்தது.

நேபாளத்தில் காணாமல்போன தமிழகத்தை சேர்ந்த **85** பேரை தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், **75** பேரின்

குடும்பத்தினரிடம் **DNA** மாதிரிகள் பெறப்பட்டு, அடையாளம் காணும் பணி நடைபெற்று வருவதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்திலிருந்து **3** அதிகாரிகள் நேபாள தலைநகர் காட்மாண்டுவில் முகாமிட்டு, தேடுதல் பணிகளை கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தெற்கு ரயில்வே **100** சதவீத அகல ரயில்பாதை மின்மயமாக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில், தெற்கு ரயில்வேயில் உள்ள **5** ஆயிரத்து **68** கிலோமீட்டர் அகல ரயில்பாதை மின்மயமாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

பட்டுக்கோட்டை — காரைக்குடி இடையேயான கடைசி **71** கிலோமீட்டர் அகல ரயில்பாதையும் தற்போது மின்மயமாக்கப்பட்டுள்ளதாக ரயில்வேயின் முதன்மை தலைமை மின்பொறியாளர் திரு கணேஷ் தெரிவித்துள்ளார்.

மின்மயமாக்கப்பட்ட ரயில் பாதையை ஆய்வு செய்ததாக அவர் கூறியுள்ளார்.

கடந்த **1931**-ஆம் ஆண்டு மே **11**-ஆம்தேதி தெற்கு ரயில்வேயின் மின்மயமாக்கும் பணிகள் தொடங்கப்பட்டதாகவும், **1968**-ஆம் ஆண்டு

முதல் சென்னை கடற்கரை — தாம்பரம் இடையே மின்சார ரயில்கள் இயக்க தொடங்கியதாகவும் திரு கணேஷ் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தில் ரயில் பெட்டி உணவகம் அமைக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

திருவனந்தபுரம் கோட்டத்தில் முதல் முறையாக, பயணிகளும், பொதுமக்களும் உணவு அருந்தும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அலுவலர் திரு செபி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte —செபி - 26 Sec. )***

<<<<<>>>>>

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சென்னை எழும்பூரிருந்து, திருநெல்வேலிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

நாளை மறுநாள் எழும்பூரிலிருந்து இரவு மணி **11.50**-க்கு புறப்படும் இந்த ரயில், விழுப்புரம், திருச்சி, மதுரை வழியாக மறுநாள் காலை மணி **11.15**-க்கு திருநெல்வேலி சென்றடையும்.

மறுமார்கத்தில் திருநெல்வேலியிலிருந்து வரும் திங்கட்கிழமை இரவு மணி **10.30**-க்கு புறப்படும் சிறப்பு ரயில் மறுநாள் காலை **10.15**-க்கு சென்னை வந்தடையும்.

<<<<<>>>>>

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரிரு இடங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 49 Sec. )***

<<<<<>>>>>

பிரதமரின் நடைபாதை வியாபாரிகளுக்கான ஸ்வநிதி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக தேனி மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — பயனாளிகள் - 49 Sec. )***

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

சென்னை தண்டையார்பேட்டை மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிகைகள் குறித்து மாநில அமைச்சர்கள் திரு லோகேஷ் தமிழ்செல்வன் மற்றும் திரு மரியவில்சன் தலைமையில் இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

---------------

வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்களுக்கான உரையாடல் குறித்த வினாடி - வினா போட்டியில் மாணவர்கள் அதிக அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்று மை பாரத் அமைப்பின் கிருஷ்ணகிரி மாவட்ட இளையோர் அலுவலர் திரு சிவசண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

----------

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்வளத்துறையின் மூலம் தூர்வாரும் பணிகளை ஆட்சியர் திருமதி சினேகா ஆய்வு செய்தார்.

---------

மதுரையில் எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மாவட்ட ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா, இன்று துவக்கி வைத்தார்

--------------

போதைப்பொருட்கள் மற்றும் இணையதள குற்றங்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாமை சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. அமல்ராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

----------------

தமிழ்நாடு அரசு சார்பில் கலை பண்பாட்டுத்துறை, தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் மூலம், ஓவிய சிற்பக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க, ஓவிய சிற்பகக் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

துலீப் கிரிக்கெட் கோப்பையை கிழக்கு மண்டல அணி வென்றுள்ளது

சென்னையில் நடைபெற்ற கிழக்கு மண்டம் — தெற்கு மண்டலம் அணிகளுக்கு இடையேயான இறுதிப்போட்டி டிராவில் முடிவடைந்தது.

முதல் இன்னிங்சில் பெற்ற கூடுதல் ரன் அடிப்படையில் கிழக்கு மண்டல அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் இன்னிங்ஸில் கிழக்கு மண்டல அணி 708 ரன்னும், தெற்கு மண்டல அணி 336 ரன்னும் எடுத்துள்ளது.

இரண்டாவது இன்னிங்சில் கிழக்கு மண்டல அணி 7 விக்கெட் இழப்பிற்கு 388 ரன் எடுத்திருந்த நிலையில் டிக்ளேர் செய்தது.

---------

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

------------

வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள அரசு பளுதூக்கும் பயிற்சி மையத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான மண்டல அளவிலான பளுதூக்கும் போட்டிகள் இன்று தொடங்கியது. இரண்டு நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் 400-க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

<<<<<END>>>>>